விலைமனு அழைப்பு

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

கிரிந்த மீன்பிடித் துறைமுக நிலப்பரப்பில் குவிந்துள்ள கடல் மண் 11,100 கியுப் இனை பரிந்துரைக்கப்பட்டுள்ள கடற்கரைக்கு கொண்டுசேர்த்தல் மற்றும் பரப்புவதற்கான விலைமனுக் கோரல்

(இரண்டாம் கட்டம்)

பெறுகை இலக்கம்: CFHC/PD/SAND/KIR/2026/121

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவரினால் மேற்குறிப்பிட்ட பெறுகைக்கான தகைமைகள் பூர்த்தி செய்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியான விலைமனு முறையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கு ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள வழங்குநர்கள் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளுக்கு 2026.10.21 ஆம் திகதி முதல் 2026.11.09 ஆம் திகதி வரையான கடமை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப. 3.00 வரை இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தினால் அல்லது கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தினால் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத ரூ. 5,000.00 தொகையொன்றை செலுத்திய பின்னர் பெறுகை ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

உரியவாறு கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை இட்ட முழுமையான ஆவணத் தொகுதியை கடித உறையொன்றில் உள்ளிட்டு அதன் இடது மூலையில் ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2026.11.10 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தில் இரண்டாம் மாடியில் பெறுகைப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் இடுவதற்கு முடியும்.

பொறிடப்பட்ட விலைமனு ஆவணங்களை 2026.11.10 ஆம் திகதி மு.ப. 11.00 மணி தாண்டியவுடன் பெறுகைப் பிரிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதித்து கிடைக்கப்பெறும் பெறுகை ஆவணங்கள் நிராகரிக்கப்படுவதுடன் திறக்கப்படாது மீள ஒப்படைக்கப்படும்.

குறித்த பெறுகை ஆவணங்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

விலைமனுவிற்கு முன்னரான கூட்டம் 2026.10.30 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தில் முதலாம் மாடியில் பணிப்பாளர் சபை கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

இதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு மேலதிக தகவல்களை **0112-525063 / 0112-529391** அல்லது **www.cfhc.gov.lk / www.promise.lk** வலைத்தளத்தை பரிசீலித்து பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல: 15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15.